போர்ட் ஸெய்ன்ட் ஜார்ஜ் கெஜெட்

IV-வது பாகத்தின் ஸப்ளிமென்ட்

SUPPLEMENT TO PART IV OF THE FORT ST. GEORGE GAZETTE,

MARCH 27, 1923.

ந. 7 (1)] மதராஸ் : செவ்வாய்க்கிழமை மாலை, 1923-ம் வருஷம் மார்ச்சு மீ 27உ. [விலை, 6 பை.

சென்னைச் சட்டநிரூபண சபையாரின் ஆக்ட்.

ACT OF THE LOCAL LEGISLATURE OF MADRAS.

சென்னைச் சட்டநிரூபண சபையாரால் செய்யப்பட்ட ஆக்ட்.

இந்தியா கவர்ன்மென்டுக்குச் சம்பந்தப்பட்ட ஆக்ட் 81-வது பிரிவைச் சேர்ந்த (3) குறிப்பிட்ட உட்பிரிவில் கண்டிருக்கும் நிபந்தனைகளை அனுசரித்து, சென்னைச் சட்டநிரூபண சபையாரால் செய்யப்பட்ட அடியிற்கண்ட ஆக்டானது - 1923-ம் வருஷம் ஜனவரி மீ 19உ கவர்னரவர்களாலும், 1923-ம் வருஷம் மார்ச்சு மீ 1உ கவர்னர் ஜெனரலவர்களாலும் அங்கீகரிக்கப்பட்டு, இதனால் யாவர்க்கும் தெரியும்படி பிரசித்தம் செய்யப்படுகிறது :—

ACT No. V OF 1923.

1923-ம் வருஷத்து 5-வது ஆக்ட்.

AN ACT TO REGULATE STATE AID TO INDUSTRIES.

கைத்தொழில்களுக்குச் செய்யப்படும் இராஜாங்க உதவியைக்குறித்து ஒழுங்கேற்படுத்துவதற்கான ஆக்ட்.

பீடிகை.

சென்னபட்டணம் ப்ரெஸிடென்ஸியில் கைத்தொழில்களை ஏற்படுத்தும் விஷயத்திலும் அபிவிர்த்திசெய்யும் விஷயத்திலும் உதவிசெய்ய பிரதேச கவர்ன்மென்டாருக்கு அதிகாரம் கொடுப்பது யுக்தமாயிருக்கிறபடியாலும், இந்த ஆக்டை ஜாரி செய்வதற்காக இந்தியா கவர்ன்மென்டுக்குச் சம்பந்தப்பட்ட ஆக்ட் 80-A பிரிவின்படி கவர்னர் ஜெனரலவர்களுடைய அனுமதியை முன்னதாகப் பெற்றிருக்கிறபடியாலும், இதனால் விதிக்கப்படுகிறதென்னவென்றால் :—

சுருக்கமான பெயர்.

1. (1) இந்த ஆக்டை, கைத்தொழில்களுக்குச் செய்யப்படும் இராஜாங்க உதவியைக்குறித்த சென்னபட்டணத்து 1922-ம் வருஷத்திய ஆக்டென்று சொல்லலாம்.

(2) இது - சென்னபட்டணம் ப்ரெஸிடென்ஸி முழுவதுக்கும் வியாபிக்கிறது.

டைரெக்டர் ஆவ் இண்டஸ்ட்ரீஸ்.

2. பிரதேச கவர்ன்மெண்டார் - இந்த ஆக்டின்படி டைரெக்டர் ஆவ் இண்டஸ்ட்ரீஸ் (கைத்தொழில் அத்தியக்ஷர்) என்னும் உத்தியோகஸ்தரின் சகல அலுவல்களையுமாவது அவைகளில் எதையாவது செய்யும்படியாக யாதொரு உத்தியோகஸ்தரையாகிலும் நபரையாகிலும் நியமிக்கலாம்.

கைத்தொழில் சபை.

3. (1) (a) அக்கிராசனாதிபதியும் உத்தியோக முறைமையில் மெம்பராயிருப்பவர்களும் உட்பட பத்து மெம்பர்களுக்குக் குறையாமலும் பன்னிரண்டு மெம்பர்களுக்கு மேற்படாமலுமுள்ள போர்ட் ஆவ் இண்டஸ்ட்ரீஸ் என்னும் கைத்தொழில் சபை ஒன்று ஏற்படுத்தப்படும். அந்த மெம்பர்களில் மூன்றுபேருக்கு மேற்படாமல் கவர்ன்மெண்ட் உத்தியோகஸ்தர்களாயிருக்க வேண்டும்.

(b) ஷை மெம்பர்களில் ஒருவர் சென்னபட்டணம் சேம்பர் ஆவ் காமர்ஸ் என்னும் வர்த்தகச் சங்கத்தில் அந்தந்த காலத்திலுள்ள மெம்பர்களாலும், ஒருவர் தென் இந்திய சேம்பர் ஆவ் காமெர்ஸ் என்னும் வர்த்தகச் சங்கத்தில் அந்தந்த காலத்திலுள்ள மெம்பர்களாலும், ஒருவர் சென்னபட்டணம் ட்ரேட்ஸ் அஸோஸியேஷன் என்னும் வியாபாரக்கூட்டத்தில் அந்தந்த காலத்திலுள்ள மெம்பர்களாலும், இரண்டு பேர் சென்னபட்டணம் சட்டநிரூபண சபையின் மெம்பர்களாலும் தெரிந்தெடுக்கப்படவேண்டும். நிர்ணயிக்கப்படக்கூடியவிதமாய் எலெக்ஷன் நடத்தப்படவேண்டும். அந்தப்படி தெரிந்தெடுக்கப்பட்ட ஒவ்வொரு நபரின் பெயரைப்பற்றிய விவரக்குறிப்பு ஒன்றை, முறையே சம்பந்தப்பட்ட சேம்பர் அல்லது அஸோஸியேஷனின் சேர்மனும் (அக்கிராசனாதிபதியும்) சட்டநிரூபண சபையின் ஸெக்ரெடரியும் (காரியதரிசியும்) பிரதேச கவர்ன்மெண்டாருக்கு அனுப்பவேண்டும்; மேலும், அந்த விவரக்குறிப்பானது போர்ட் ஸேயிண்ட் ஜார்ஜ் கெஜெட்டில் பிரசித்தம் செய்யப்படவேண்டும்.

(c) சென்னபட்டணம் டைரெக்டர் ஆவ் இண்டஸ்ட்ரீஸ் என்னும் உத்தியோகஸ்தரும், சென்னபட்டணம் கவர்ன்மெண்டுக்கு பைனான்ஸ் டிபார்ட்மெண்டில் ஸெக்ரெடரியும் உத்தியோகமுறைமையில் கைத்தொழில் சபையின் மெம்பர்களாவார்கள்.

(2) அக்கிராசனாதிபதியையும் மற்ற மெம்பர்களையும், பிரதேச கவர்ன்மெண்டார் - போர்ட் ஸேயிண்ட் ஜார்ஜ் கெஜெட்டில் விளம்பரமூலமாய் நியமிக்கவேண்டும்; ஆனால், பாங்கிங் (லேவாதேவி வர்த்தகம்) நடத்துகிற அல்லது (இராஜதானிப்பட்டணமல்லாமல்) வெளியூர்களிலே கைத்தொழில் நடத்திவருகிற வகுப்பார்களுக்கும் குடிசைக் கைத்தொழில்களுக்கும் ஷை எலெக்ஷன் மூலமாய் பிரதிநிதிகள் ஏற்படாதபட்சத்தில், மேலே கண்டபடி நியமிக்கப்படும் மெம்பர்களில் சாத்தியமானவரையிலே அப்படிப்பட்ட வகுப்பார்கள் அல்லது கைத்தொழில்களின் பிரதிநிதிகளாயிருக்கும் நபர்கள் சேர்ந்திருக்கவேண்டும்.

(3) கைத்தொழில் சபையார் - இந்த ஆக்டின்படி இராஜாங்க உதவி பெறுவதற்காக செய்துகொள்ளப்படும் விண்ணப்பங்கள் விஷயத்திலே பிரவர்த்திப்பதில் பிரதேச கவர்ன்மெண்டாருக்கு உதவிபுரியவேண்டும்.

(4) [illegible]கைத்தொழில் சபையின் கூட்டத்தில் ஆலோசனைக்கு வருகிற யாதொரு [illegible]தொரு மெம்பருக்குத் தம் சார்பிலாவது தம்முடைய பாகஸ்தர் [illegible]ா நேராகவல்லாமல் மற்றப்படியோ யாதொரு திரவிய சம்பந்தமான பற்று [illegible]காலும் அதில் அவர் தொழில் முறையில் ஒரு கட்சிக்காரரின் சார்பிலாயினும் கவர்[illegible]யாதொரு பிரதேச அதிகார சபை அல்லது யாதொரு ரெயில்வே கம்பெனியல்லாத [illegible]தொரு நபரின் ஏஜெண்டாகவாயினும் பற்றுள்ளவராயிருந்தாலும், அவர் - அந்த [illegible]ப்பற்றி தர்க்கம் ஏற்படும்போது வோட் கொடுக்கவுங்கூடாது, அந்த தர்க்கத்தில [illegible]ள்ளவுங்கூடாது.

இந்த ஆக்டிற்கண்ட நிபந்தனைகளின்படிக்கன்றி மற்றப்படி உதவி கிடைக்காதென்பது.

4. இ[illegible]ண்ட நிபந்தனைகளின்படிக்கன்றி மற்றப்படி யாதொரு [illegible]ல் சம்பந்தமான வேலைக்காவது முயற்சிக்காவது பிரதேச [illegible]ாரால் உதவி எதுவும் செய்யப்படமாட்டாது.

உதவிசெய்யப்படும் கைத்தொழில்கள்.

5. (1) இந்த ஆக்டின்படி எந்தக் கைத்தொழில்களுக[illegible] செய்யப்படக்கூடுமோ அந்தக் கைத்தொழில்களானவை - [illegible] திரவிய அபிவிருத்திக்கு முக்கியமாய் சம்பந்தப்பட்ட[illegible]க இருக்கவேண்டியதுமல்லாமல்—

(a) நூதனமான அல்லது ஆரம்ப ஸ்திதியிலுள்ள கைத்தொழில்களாகவாவது,

(b) கைத்தொழில்கள் அபிவிர்த்தி அடையாமலிருக்கிற விஸ்தீர்ணங்களுக்குள் புதிதாய் ஏற்படுத்தப்போகும் கைத்தொழில்களாகவாவது,

(c) குடிசைக் கைத்தொழில்களாகவாவது

இருக்கவேண்டும்.

(2) யாதொரு ஜாய்ன்ட் ஸ்டாக் கம்பெனியானது—

(a) ரூபாய் ரூபமாயுள்ள மூலதனம் பெற்றிருப்பதாய் இந்தியாவில் ரெஜிஸ்டர் செய்யப்பட்டதாகவும்,

(b) அந்தக் கம்பெனியின் நிர்வாகசபையில் குறைந்தது இத்தனை மெம்பர்களாவது இன்ன சங்கியாபரிமாணமுள்ள மெம்பர்களாவது இந்தியர்களாயிருக்கவேண்டுமென்று கண்டு பிரதேசக கவர்ன்மென்டார் அப்போதைக்கப்போது செய்யக்கூடிய விதிகளை அனுசரித்து அது நடத்தப்படுவதாகவும்,

இருந்தாலன்றி மற்றப்படி, அந்தக் கம்பெனிக்கு அப்படிப்பட்ட உதவி எதுவும் செய்யப்படமாட்டாது.

மேலும், இந்த ஆக்டின்படி உதவி பெறுகிறவர் ஒவ்வொருவரும் பிரதேச கவர்ன்மென்டார் அப்போதைக்கப்போது நிர்ணயிக்கக்கூடியபடி அப்ரென்டிஸுகளை (தொழில் கற்றுக்கொள்ளுபவர்களை) பயிற்சிசெய்விக்க ஏற்பாடு செய்யவேண்டும்.

(3) இந்தப் பிரிவிற்கண்ட திட்டங்கள் நிறைவேறியிருக்கின்றனவா என்பதைக் குறித்து பிரதேச கவர்ன்மென்டார் செய்யும் தீர்மானம் முடிவானதாகும்.

இராஜாங்க உதவி செய்யும் முறை.

6. இந்த ஆக்டிலும் அதன்படி செய்யப்பட்ட விதிகளிலும் கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு, கைத்தொழில் சம்பந்தமான யாதொரு வேலை அல்லது முயற்சிக்கு அடியிற்கண்ட வகைகளிலே ஒரு வகையிலாவது பல வகைகளிலாவது உதவிசெய்ய பிரதேச கவர்ன்மென்டாருக்கு அதிகாரம் உண்டு :—

(a) கடன் கொடுப்பது ;

(b) ஒரு பாங்கியில் காஷ் க்ரெடிட் என்னும் ரொக்கக் கணக்கு ஏற்படும்படியாகவோ ஓவர்டிராப்ட் என்னும் அதிகப்பற்றாவது நிஷ்கரிஷையான முன்பணமாவது கிடைக்கும்படியாகவோ உத்தரவாதம் பண்ணுவது ;

(c) ஆராய்ச்சிவேலை நடத்துவதற்கோ யந்திரங்கள் வாங்குவதற்கோ சகாயத் தொகை கொடுப்பது ;

(d) பங்குகள் அல்லது டிபென்சர் என்னும் கடன் பத்திரங்கள் எடுத்துக்கொள்வது ;

(e) யாதொரு ஜாய்ன்ட் ஸ்டாக் கம்பெனியின் மூலதனத் தொகையில் ஒரு பாகத்தின்மேல் இவ்வளவுக்குக் குறையாமல் லாபத்துக்கு உத்தரவாதம் செய்வது ;

(f) பிரதேச கவர்ன்மென்டாருக்குச் சொந்தமாயிருக்கும் நிலத்தையாவது வேலை செய்யப்படாத சரக்குகளையாவது விறகையாவது ஜலத்தையாவது அனுகூலமான ஷரத்துகளின்மேல் கொடுப்பது.

6-வது பிரிவின்படி கொடுக்கப்பட்ட அதிகாரத்தைப் பிரித்துக்கொடுப்பது.

7. பிரதேச கவர்ன்மென்டார் - 6-வது பிரிவின்படி இராஜாங்க உதவி செய்யும் அதிகாரத்தைப் பிரித்துக்கொடுக்கலாம்: ஆனால், யாருக்[illegible] அதிகாரம் பிரித்துக் கொடுக்கப்படுகிறதோ அந்த அதி[illegible]வர் - கைத்தொழில் சம்பந்தமான எதாவது ஒரு வே[illegible] முயற்சிக்கு 10,000 ரூபாய்க்கு மேற்பட்ட தொ[illegible]கோ மதிப்புக்கோ உதவிசெய்ய அதிகாரம்பெற்றவராகமாட்டார்.

இராஜாங்க உதவி பெறுவதற்காக விண்ணப்பம் செய்துகொள்வதும், அப்படிப்பட்ட விண்ணப்பங்கள் விஷயமாய்ப் பிரவர்த்திக்கையில் அனுசரிக்கவேண்டிய நடவடிக்கை முறையும்.

8. (1) கைத்தொழில் சம்பந்[illegible] வேலை [illegible]லது முயற்சிக்காக கடனாவது வேறு [illegible]கையான உதவியாவது பெற விரும்பும் யாதொரு[illegible]ணயிக்கப்படக்கூடிய நமூனாப்படி டைரெக்டர் [illegible] இண்டஸ்ட்ரீஸ் என்னும் உத்தியோகஸ்தருக்கு தமது [illegible]த்தைச் செய்துகொள்ளவேண்டியதுமல்லாமல், [illegible]யும் வேலையைக்குறித்து நிர்ணயிக்கப்படக்கூடிய [illegible]த் தெரிவிக்கவும் வேண்டும்.

(2) ஐம்பதினாயிரம் ரூபா[illegible]பட்ட அளவுக்கு உதவி செய்யவேண்டுமென்று விண்ணப்பம் செய்துகொள்[illegible]சத்திலும், வேறே எந்த விஷயத்தில் அடியிற்கண்ட நடவடிக்கை மு[illegible]அனுசரிப்பது அவசியமென்று தாம் எண்ணுகிறாரோ அப்படிப்பட்ட யா[illegible]த்திலும், டைரெக்டர் ஆவ் இண்டஸ்ட்ரீஸ் என்னும் உத்தியோகஸ்தரான்[illegible]க்கப்பட்ட விதமாய் விளம்பரம் பிரசுரித்து, மேலே விண்ணப்பம் செ[illegible]பட்டபடி உதவி செய்துகொடுப்பதற்கு ஆட்சேபிக்கிற யாதொரு நபர் கு[illegible] காலத்திலாவது இடத்திலாவது தம்முடைய ஆட்சேபனைகளைத் தெரி[illegible]ளவேண்டுமென்று அவருக்கு உத்தரவு செய்யவேண்டியதுமல்லாமல், அந்[illegible]பனையைக் கேட்டு அவசியமானபடி விசாரணை செய்யவும்வேண்டும்.

([illegible]) உதவி பெறுவதற்காகச் செய்துகொள்ளப்படும் ஒவ்வொரு விண்ணப்பத்தையும் கைத்தொழில் சபையாரின்முன் ஆலோசனைக்காக வைக்கவேண்டும்.

(4) பிரதேச கவர்ன்மென்டார் - உதவி செய்யவேண்டுமென்று செய்துகொள்ளப்படும் விண்ணப்பங்களைப்பற்றி ஆலோசனை சொல்லும் காரியத்துக்காக ஜில்லா கம்மிட்டிகள் ஏற்படுத்தலாம்.

(5) ஷை சபையார் யாதொரு கூட்டத்தில் ஏகோபித்த ஒரு தீர்மானமூலமாக பிரஸ்தாப விண்ணப்பத்தைத் தள்ளிவிடவேண்டுமென்று ஆலோசனை சொன்னால் இந்த ஆக்டின்படி உதவி எதுவும் செய்யக்கூடாது.

கடன் கொடுப்பது.

9. கைத்தொழில் சம்பந்தமான வேலை அல்லது முயற்சிக்குரிய சொத்தின் மதிப்பிலிருந்து அதன்மேல் ஏற்கனவே ஏற்பட்டிருக்கும் சிக்குச்சிலுகுகளைக் கழித்துவிட்ட பிறகு நிற்கும் நிகரத்தொகையில் நூற்றுக்கு ஐம்பது வீதத்துக்கு அதிகமான ஒரு தொகை அளவுக்குக் கடன்கொடுக்கக்கூடாது; பிரதேச கவர்ன்மென்டாரால் நியமிக்கப்படக்கூடிய நபரால் நிர்ணயிக்கப்படக்கூடிய விதிகளை அனுசரித்து ஷை மதிப்பு நிச்சயிக்கப்படவேண்டும்; இந்தப்படி மதிப்பிடும் காரியத்துக்காக, கொடுக்கப்பட்ட கடன் தொகைகளைச் செலவழிப்பதனால் ஏற்படும் அதிகப்படியான சொத்துக்களையும், நிர்ணயிக்கப்படக்கூடிய அளவுக்குக் கணக்கில் எடுத்துக்கொள்ளலாம்.

கடன்களுக்கு இன்ன விதமாய் ஈடு செய்யப்படவேண்டுமென்பது.

10. இந்த ஆக்டின்படி கொடுக்கப்படும் ஒவ்வொரு கடனுக்கும், பிரஸ்தாப வேலை அல்லது தொழில் முயற்சிக்குரிய சொத்தின்பேரில் கடன் கொடுக்கப்படும் காலத்தில் சிக்குச்சிலுகுகள் எவையேனும் ஏற்பட்டிருந்தால் அவைகளுக்குட்பட்டு அந்த சொத்து முழுவதன்பேரிலும் கொதுவை அல்லது (floating charge) விசேஷமாய் பாதிக்காத வேறே வகையான பொறுப்பு ஏற்படுத்தியும், பிரதேச கவர்ன்மென்டார் உத்தரவு செய்யக்கூடியபடி மேல்ஜாமீன் ஏதாகிலும் கொடுத்தும் ஈடுசெய்யவேண்டும்; மேலும், அந்தக் கடனுக்குப் பிரதேச கவர்ன்மென்டாரால் நிர்ணயிக்கப்படக்கூடிய தேதிகளிலும் வீதங்களின்படியும் வட்டி செலுத்தப்படத்தக்கதாகும்.

பார்வையிடுவதும் ரிடர்ன் என்னும் விவரக் கணக்குகளும்.

11. இந்த ஆக்டின்படி கடன் வேண்டுமென்று விண்ணப்பம் செய்துகொள்ளப்பட்டிருக்கும் யாதொரு விஷயத்திலே விண்ணப்பதாரரும், இந்த ஆக்டின்படி கொடுக்கப்பட்டிருக்கும் யாதொரு கடன் திருப்பிச் செலுத்தப்படாமலிருக்கிற யாதொரு காலத்தில் அந்தக் கடன் பெற்றவரும்—

(a) கைத்தொழில் சம்பந்தமான வேலை அல்லது முயற்சி நடத்தப்படும் வளைவையாவது கட்டிடங்களையாவது அந்த வேலை அல்லது முயற்சிக்குரிய தளவாடங்களையாவது கையிருப்புச் சாமான்களையாவது பார்வையிடுவது சம்பந்தமாய்ப் பிரதேச கவர்ன்மென்டாரால் பொதுவாகவோ அல்லது பிரத்தியேகமாகவோ பிறப்பிக்கப்படும் யாதொரு உத்தரவின்படி நடந்துகொள்ளவும்,

(b) கைத்தொழில் சம்பந்தமான ஷை வேலை அல்லது முயற்சிக்குரிய சகல கணக்குகளையும் பார்வையிட வொட்டவும்,

(c) தயார்செய்யப்பட்ட சகல பொருள்களின் விவரம், அளவு ஆகிய இவ்விரண்டையுங்குறித்து பூர்த்தியான விவரக்கணக்குகள் சவதரிக்கவும்,

(d) பிரதேச கவர்ன்மென்டார் அப்போதைக்கப்போது உத்தரவு செய்யக்கூடிய விசேஷக் கணக்குகள் வைத்துவரவும் அல்லது ஸ்டேட்மென்டுகள் சவதரிக்கவும்,

(e) கைத்தொழில் சம்பந்தமான வேலை அல்லது முயற்சிக்குரிய கணக்குகளைப் பிரதேச கவர்ன்மென்டாரால் நிர்ணயிக்கப்படக்கூடியபடி தணிக்கைசெய்ய விடவும்,

கடமைப்பட்டவராவார்கள்.

உதவி செய்யப்பெற்ற வேலை விஷயமாய் மேல் விசாரணை புரிவது.

12. இந்த ஆக்டின்படி இரண்டு லக்ஷம் ரூபாய் அளவுக்கோ அதற்கு மேற்பட்டோ கடன் அல்லது கடன்கள் கொடுக்கப்படுகிற யாதொரு விஷயத்திலே, பிரதேச கவர்ன்மென்டார் - கவர்ன்மென்ட் டைரெக்டர்களை ஏற்படுத்தியோ அல்லது மற்றப்படியோ பிரஸ்தாப வேலை அல்லது தொழில் முயற்சி நடப்பது விஷயமாய்த் தங்களுடைய நன்மையைப் பாதுகாக்கும்பொருட்டு தங்களுக்குப் போதுமானதென்று தோற்றும் மேல் விசாரணை ஏற்படும்படியாக அதிகாரம் கைக்கொள்ளவேண்டும்; வேறே யாதொரு விஷயத்திலும் அவர்கள் அந்தப்படியே அதிகாரம் கைக்கொள்ளலாம்.

கடன்களைத் திருப்பிச் செலுத்துவது.

13. (1) இந்த ஆக்டின்படி கொடுக்கப்படும் ஒவ்வொரு கடனையும், வாஸ்தவத்தில் கடன் கொடுக்கப்பட்ட தேதியிலிருந்தாவது, தவணைகளாகக் கடன் கொடுக்கப்பட்டிருந்தால் கடைசி தவணைத்தொகை கொடுக்கப்பட்ட தேதியிலிருந்தாவது, கடன் கொடுக்கப்பட்ட உத்தரவின் மூலமாய் நிஷ்கரிஷை செய்யப்படக்கூடிய கால அளவுக்குள்ளாகத் தவணைகளாய்த் திருப்பிச் செலுத்தத்தக்கதாக ஏற்பாடு செய்யவேண்டும்.

(2) மேலே கண்டபடி நிஷ்கரிஷை செய்யப்படும் கால அளவை, பொதுவான அல்லது பிரத்தியேகமான உத்தரவு மூலமாய்ப் பிரதேச கவர்ன்மெண்டார் இருபது வருஷத்துக்கு அதிகமாக நிஷ்கரிஷை செய்தாலன்றி மற்றப்படி, அது - இருபது வருஷத்துக்கு மேற்படக்கூடாது.

பாங்கிகளில் கடன் கிடைப்பது விஷயமாய் உத்தரவாதம் செய்வது.

14. ஒரு பாங்கியில் காஷ் க்ரெடிட் என்னும் ரொக்கக்கணக்கு ஏற்படும்படியாகவாவது ஓவர்ட்ராப்ட் என்னும் அதிகப்பற்றுகிலும் நிஷ்கரிஷையான முன்பணமாகிலும் கிடைக்கும்படியாகவாவது, கடன் கொடுப்பது விஷயமாய் 9 முதல் 12 வரையிலுள்ள பிரிவுகளில் நிர்ணயிக்கப்பட்ட திட்டங்களின்படிக்கன்றி மற்றப்படி, உத்தரவாதம்செய்து கொடுக்கப்படமாட்டாது.

பங்குகள் அல்லது டிபென்சர் என்னும் கடன் பத்திரங்கள் எடுத்துக்கொள்வது அல்லது மூலதனத் தொகையின்மேல் இவ்வளவுக்குக் குறையாமல் லாபத்துக்கு உத்தரவாதம் செய்வது.

15. பிரதேச கவர்ன்மெண்டார் பங்குகளையும் கடன் பத்திரங்களையும் எடுத்துக்கொள்வது விஷயமாகவாகிலும், கைத்தொழில் சம்பந்தமான யாதொரு வேலை அல்லது முயற்சிக்குரிய மூலதனத் தொகையின்மேல் இவ்வளவுக்குக் குறையாமல் லாபத்துக்கு உத்தரவாதம் செய்வது விஷயமாகவாகிலும் ஏற்பட்டுள்ள திட்டம் என்னவென்றால், பார்வையிடுவதைப்பற்றியும் ரிடர்ன் என்னும் விவரக் கணக்குகள் அனுப்புவதைப்பற்றியும் 11-வது பிரிவில் கண்ட திட்டங்களுக்கும் கவர்ன்மெண்ட் மேல்விசாரணை யைப்பற்றி 12-வது பிரிவிற்கண்ட நிபந்தனைகளிலுள்ள திட்டங்களுக்கும் பிரஸ்தாப வேலை அல்லது தொழில் முயற்சி உட்பட்டிருக்கவேண்டுமென்பதாகும் :

ஆனால், (a) கவர்ன்மெண்டார் எடுத்துக்கொள்ளும் சகல பங்குகளின் விஷயத்திலும் அவைகளுக்குச் சமமான பங்குகளுக்குக் குறையாமல் (வேறே) பங்குகள் எடுத்துக் கொள்ளப்பட வேண்டியதுமல்லாமல் அவைகளுக்குப் பூர்த்தியாய் தொகை செலுத்தப்பட்டிருக்கவும் வேண்டும் ;

(b) கவர்ன்மெண்டார் லாபத்துக்கு உத்தரவாதம் செய்துகொடுக்கிற மொத்த மூலதனத்தின் விஷயத்திலும் உத்தரவாதம் ஏற்பட்டிராமல் அதற்குச் சமமான ஒரு தொகைக்குக் குறையாத அளவுக்கு மூலதனம் செலுத்தப்பட்டிருக்கவும்வேண்டும்.

பிரதேச கவர்ன்மெண்டார் சகாயத் தொகை கொடுப்பது.

16. சகாயத்தொகை கொடுப்பது விஷயமாகவாவது, செலுத்திவிடப்பட்ட மூலதனத் தொகையின்மேல் இவ்வளவுக்குக் குறையாமல் லாபத்துக்கு உத்தரவாதம் செய்து அந்தப்படியே யாதொரு தொகை கொடுப்பது விஷயமாகவாவது, அனுகூலமான ஷரத்துகள் ஏற்படுத்தி ஸர்க்கார் நிலத்தையாகிலும் வேலை செய்யப்படாத சரக்குகளையாகிலும் விறகையாகிலும் ஜலத்தையாகிலும் கொடுப்பது விஷயமாகவாவது சாதாரணமாய் ஏற்பட்டிருக்கும் திட்டம் என்னவென்றால், இத்தனை வருஷ காலமென்று நிஷ்கரிஷை செய்யப்பட்ட ஒரு கால அளவுக்குள் கைத்தொழில் சம்பந்தமான வேலை அல்லது முயற்சியிலிருந்து அதில் போட்டிருக்கும் மூலதனத் தொகையின்பேரில் பிரதேச கவர்ன்மெண்டாரால் நிஷ்கரிஷை செய்யப்படக்கூடிய வீதத்தைக் காட்டிலும் [illegible]மாய் வட்டி அல்லது ஈவுத்தொகை கிடைப்பதாக எண்பிக்கப்படுகிறபட்சத்திலே [illegible] கால அளவு முடிவாகும்போது மேலேகண்டபடி கொடுக்கப்பட்ட தொகை[illegible] ஒரு தொகையாகிலும் மேலேகண்டபடி ஸர்க்கார் நிலம் முதலிய[illegible] காலத்தில நிஷ்கரிஷை செய்யப்பட்டபடி அவைகளின் மதிப்புக்குச் சம[illegible]தொகையாகிலும் பிரதேச கவர்ன்மெண்டாருக்கு திருப்பிச் செலுத்தப்படவேண்டு[illegible]மென்பதாகும்.

கொடுக்கப்படும் சகாயத்தொகை எதுவும் - [illegible]த்துக்கேற்றபடி ஆராய்ச்சி நடத்துவதற்காகப் பிடித்த செலவிலாகிலும் யந்தி[illegible] வாங்குவதற்காகப் பிடித்த செலவிலாகிலும் நூற்றுக்கு 40 வீதத்துக்கு மேற்[illegible]து.

இராஜாங்க உதவி சம்பந்தமான திட்டம் நிறைவேறுமலிருந்தால் லாபத்தை ஒருவகைசெய்வது.

17. இராஜாங்க உதவி பெறும் [illegible]ரும - என்ன திட்டங்களின்படி அந்த உதவி செய்யப்[illegible]றதோ அந்த திட்டங்கள் நிறைவேறுகிற வ[illegible] கைத்தொழில் சம்பந்தமான வேலை அல்லது முயற்[illegible] மூலதனத் தொகையின்மேல் நூற்றுக்கு இவ்வள[illegible]று கவர்ன்மெண்டாரால் அப்போதைக்கப்போது நிஷ்கரிஷை செய்யப்படக்கூடிய வீதத்துக்கு அதிகமாக யாதொரு ஈவுத் தொகையைக் [illegible]வுங்கூடாது, யாதொரு லாபம் பங்கிடவுங்கூடாது, எடுத்துக் கொள்ளவு[illegible]. தளவாடங்கள், கட்டிடங்கள் ஆகிய இவைகளில் ஏற்படும் மதிப்புக் குறைவுக்கா[illegible] அல்லது இவைகள் உபயோகத்தில் இராமற்போவதற்காகவும் கடன் பத்திரங்களின்பேரில் வட்டி கொடுப்பதற்காகவும் சரியான தொகைகளை எடுத்து வைத்த பிறகு லாபத்தில் மிகுதி நிற்பதை கவர்ன்மெண்டார் கட்டளையிடக்கூடிய விதமாய் உபயோகிக்கப்படும்படி ரிஸர்வ் பண்ட் என்னும் சேம நிதியில் சேர்க்கவேண்டும்.

பாக்கியாயிருக்கும் பணத்தை வசூலிக்கும் முறைகள்.

18. (1) இந்த ஆக்டின்படி செலுத்தப்படத்தக்க தொகைகளின்மேல் வாங்கப்படத்தக்க யாதொரு வட்டியும், செலவு ஏதாகிலும் செய்யப்பட்டிருந்தால் அதுவும் உட்பட அப்படிப்பட்ட சகல தொகைகளும் செலுத்தவேண்டிய காலத்தில் செலுத்தப்படாவிட்டால், அவைகள் நிலத்தீர்வை பாக்கியாயிருந்தால் எப்படியோ அப்படியே அவைகளை அந்தந்த காலத்தில் செலாவணியாய்க்கொண்டிருக்கும் சட்டப்படி உதவி பெற்ற நபரிடத்திலிருந்தும் அவருடைய ஜாமீன்தாரர் எவராகிலும் இருந்தால் அவரிடத்திலிருந்தும் வசூல் செய்யலாம்.

(2) மேலேகண்டபடி பாக்கியாயிருக்கும் யாதொரு தொகை ஜாமீன்தாரரால் செலுத்தப்பட்டாலும், (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி அவரிடமிருந்தாவது அவருடைய சொத்திலிருந்தாவது வசூல் செய்யப்பட்டாலும், கலெக்டரானவர் - ஜாமீன்தாரர் விண்ணப்பம் செய்துகொள்வதன்மேல், உதவிபெற்ற நபரிடமிருந்து அந்தத் தொகையைக் கூடியமட்டும் வசூலித்து அதை ஜாமீன்தாரருக்குக் கொடுக்கவேண்டும்.

விதிகள் செய்வதற்கான அதிகாரம்.

19. (a) பிரதேச கவர்ன்மெண்டார் - இந்த ஆக்டிற்கண்ட சகல காரியங்களையுமாவது அவைகளில் எதையாவது நிறைவேற்றுவதற்காக இந்த ஆக்டுக்குப் பொருத்தமற்றவைகளாயிராத விதிகள் செய்யலாம்.

(b) முக்கியமாகவும் முந்திய அதிகாரத்தின் பொதுத் தன்மைக்கு பாதகமில்லாமலும், அவர்கள் அடியிற்கண்ட சகல விஷயங்களைக்குறித்துமாகிலும் அவைகளில் எதைக் குறித்தாகிலும் ஒழுங்கேற்படுத்துவதற்காக விதிகள் செய்யலாம் :—

(1) இன்ன வகைகளைச் சேர்ந்த கைத்தொழில் சம்பந்தமான வேலைகள் அல்லது முயற்சிகளுக்கும் இன்ன காரியங்களுக்காகவும் உதவி செய்யலாமென்பது ;

(2) கைத்தொழில் சபையின் அமைப்பும், அதைச் சேர்ந்த மெம்பர்களின் உத்தியோக கால அளவும், ஷை சபையின் கூட்டங்களில் ஏற்படவேண்டிய க்வோரமும், அந்த சபை தீர்மானங்கள் செய்யவேண்டிய முறையும், அதன் சிப்பந்தியை நியமிப்பதும், அதைச் சேர்ந்த மெம்பர்களுக்குப் பிரதிபலன் கொடுப்பதும், அதன் வேலை நடந்தேறுவதற்குச் சம்பந்தப்பட்ட இதரமான சகல விஷயங்களும் ; ஜில்லா கம்மிட்டிகளின் அமைப்பும் அவைகளுடைய அலுவல்களும் ;

(3) இராஜாங்க உதவி செய்வதற்குள்ள அதிகாரத்தை 7-வது பிரிவின்படி பிரித்துக்கொடுப்பது ;

(4) இராஜாங்க உதவி வேண்டுமென்று செய்துகொள்ளும் விண்ணப்பங்களை இன்ன மாதிரியாய்ச் செய்துகொள்ளவேண்டுமென்பதும் அப்படிப்பட்ட விண்ணப்பங்களில் இன்ன விவரங்கள் தெரிவிக்கவேண்டுமென்பதும் ; ஆனால், யாதொரு தொழில் முறையைக் குறித்த அல்லது யாதொரு விண்ணப்பதாரருக்கு அல்லது உதவி பெறுகிறவருக்குச் சொந்தமான யாதொரு பேடென்ட் என்னும் அதிகாரப்பத்திரத்தைக் குறித்த சங்கேத விவரங்களுக்குச் சம்பந்தமான யாதொரு சமாசாரத்தை வெளியிடும்படி அப்படிப்பட்ட விதியைக்கொண்டு அவரைக் கேட்கக்கூடாது ;

(5) இராஜாங்க உதவி பெறுவதற்காகச் செய்துகொள்ளப்படும் விண்ணப்பங்கள் விஷயத்தில் பிரவர்த்திக்கும்போது இன்ன விதமாய் விசாரணை நடத்தவேண்டுமென்பதும், இன்ன விஷயங்களைக் குறித்து விசேஷமாய் விசாரிக்கவேண்டுமென்பதும் ; அப்படிப்பட்ட விசாரணைகள் நடத்தும் டைரெக்டர் ஆவ் இண்டஸ்ட்ரீஸ் என்னும் உத்தியோகஸ்தர் இன்ன அதிகாரங்களைச் செலுத்தவேண்டுமென்பதும் ;

(6) கைத்தொழில் சம்பந்தமான யாதொரு வேலை அல்லது முயற்சிக்குரிய சொத்துக்களின் மதிப்பை இன்ன விதமாய் நிச்சயிக்கவேண்டுமென்பது ;

(7) கொடுக்கப்பட்ட கடன் தொகைகளும் ஸர்க்கார் நிலம் முதலியவைகளும் தக்கபடி உபயோகிக்கப்படுவதற்காக இன்ன வகையான ஈடு வாங்கவேண்டுமென்பதும், இன்ன வட்டி வீதங்களின்படியும் இன்ன திட்டங்களுக்குட்பட்டும் ஷை கடன் தொகைகள் அல்லது நிலம் முதலியவை கொடுக்கப்படலாமென்பதும், 10-வது பிரிவின்படி கொதுவை, விசேஷமாய் பாதிக்காத வேறே விதமான பொறுப்பு அல்லது மேல் ஜாமீன் ஏற்படுத்துவதும் ;

(8) இராஜாங்க உதவி செய்யப்பெற்றிருக்கும் கைத்தொழில் சம்பந்தமான யாதொரு வேலை அல்லது முயற்சிக்குரிய வளவுகளையும் கட்டிடங்களையும் தளவாடங்களையும் கையிருப்புச் சாமான்களையும் அந்த வேலை அல்லது தொழில் முயற்சிக்குச் சம்பந்தப்பட்ட கணக்குகளையும் பார்வையிடுவது ;

(9) கைத்தொழில் சம்பந்தமான எந்த வேலை அல்லது முயற்சி விஷயமாய் இராஜாங்க உதவி செய்து கொடுக்கப்பட்டிருக்கிறதோ அந்த வேலை அல்லது முயற்சிக்குரிய கணக்குகளை இன்ன விதமாய் வைத்துவரவேண்டுமென்பதும் தணிக்கை செய்ய வேண்டுமென்பதும் அது சம்பந்தமான ரிடர்ன் என்னும் விவரக்கணக்குகளை இன்ன விதமாய்ச் சவதரிக்கவேண்டுமென்பதும் ;

(10) கவர்ன்மென்ட் டைரெக்டர்களை நியமிப்பதும், அவர்களுடைய அலுவல்களும் அல்லது கைத்தொழில் சம்பந்தமான எந்த வேலைகள் அல்லது முயற்சிகள் விஷயமாய் இராஜாங்க உதவி செய்யப்பட்டிருக்கிறதோ அவைகள் சம்பந்தமாய் மேல்விசாரணை புரிவதற்கான இதர முறைகளை நிர்ணயிப்பது ;

(11) கடன் தொகைகளோ நிலம் முதலியவைகளோ கொடுக்கப்பட்டிருக்கும் திட்டங்கள் எந்த விஷயங்களில் நிறைவேற்றப்படாமல் இருக்கின்றனவோ அந்த விஷயங்களில் லாபத்தை உபயோகிப்பது ;

(12) பாங்குகளில் காஷ் க்ரெடிட் என்னும் ரொக்க கணக்குகள் ஏற்படுவதற்காகவோ ஓவர்ட்ராப்ட் என்னும் அதிகப்பற்றுவது நிலையான முன்பணத்தொகைகளாவது கிடைப்பதற்காகவோ பிரதேச கவர்ன்மென்டார் உத்தரவாதம் செய்வதும், இது காரியத்துக்காக பாங்கிகளை அங்கீகாரம் பண்ணுவதும் ;

(13) கடன் தொகைகளைத் திருப்பிச் செலுத்துவதற்கான கால அளவுகளையும், சகாயத் தொகைகளையும் கொடுக்கப்பட்ட நிலம் முதலியவைகளின் மதிப்புத்தொகைகளையும் திருப்பிச் செலுத்துவதற்கான திட்டங்களையும் தேதிகளையும் நிஷ்கரிஷை செய்வது ;

(14) இந்த ஆக்டின்படி பாக்கியாயிருக்கும் யாதொரு தொகையை வசூலிப்பது.

ஆனால், அப்படிப்பட்ட விதிகளை சட்டநிரூபண சபையாரின்முன் வைத்து போர்ட் ஸெய்ன்ட் ஜார்ஜ் கெஜெட்டில் பிரசித்தம் செய்யவேண்டும் ; அதற்குப் பிறகு ஒரு மாத காலத்துக்குள்ளாவது, அந்தக் கால அளவுக்குள் சட்ட நிரூபண சபை கூடாமலிருந்தால் அதன் அடுத்த சபையிலாவது அவை திருத்தப்பட்டாலன்றி மற்றப்படி, ஷை கால அளவுக்குப பிறகு அவை சட்டத்தைப்போல் செலாவணியாகும்.

கைத்தொழில்களை ஆரம்பிப்பது அல்லது நடத்துவது விஷயமாகவும் சில வகைகளில் உதவி செய்வது விஷயமாகவும் கவர்ன்மென்டாருக்குள்ள அதிகாரம்.

20. இந்த ஆக்டில் சொல்லியிருப்பதெதனாலும்,

(a) பரிசோதனை செய்யும் காரியங்களுக்காகவாவது கைத்தொழில் அபிவிர்த்தியாவதை அதிகப்படுத்தும்பொருட்டாவது கைத்தொழில் சம்பந்தமான முயற்சிகளை ஆரம்பிப்பதற்காகிலும் நடத்துவதற்காகிலும்,

(b) கைத்தொழில் சம்பந்தமான வேலை அல்லது முயற்சியால் உற்பத்தி செய்யப்படும் பொருள்கள் முழுவதையுமாகிலும் அவைகளில் ஒரு பாகத்தையாகிலும் வியாபார ஷரத்துக்களின்படி கிரயத்துக்கு வாங்குவதாக உடன்படிக்கைகள் செய்துகொண்டு ஷை வேலை அல்லது முயற்சிக்கு உதவி செய்வதற்கும்,

(c) கைத்தொழில் சம்பந்தமான யாதொரு வேலை அல்லது முயற்சியை ஆரம்பிப்பதற்காகவாவது நடத்துவதற்காகவாவது ஆலோசனை சொல்பவர்கள் ஹோதாவிலாகிலும் ஒருவருஷத்துக்கு மேற்படாமல் வரையறுக்கப்பட்ட ஒருகால அளவுக்காகிலும் ஸர்க்கார் உத்தியோகஸ்தர்கள் அல்லது நிபுணர்களின் ஊழியங்களை இலவசமாகவோ அனுகூலமான ஷரத்துக்களின்படியோ கொடுத்து ஷை வேலை அல்லது முயற்சிக்கு உதவி செய்வதற்கும்,

(d) கைத்தொழிலுக்கேற்ற கல்வி விஷயமாகவாவது அப்ரென்டிஸ்-களை பயிற்சி செய்விப்பது விஷயமாகவாவது கைத்தொழில் சம்பந்தமான யாதொரு வேலை அல்லது முயற்சிக்கு உதவிசெய்வதற்கும்,

கவர்ன்மென்டாருக்குத் தடை ஏற்படுவதாகக் கொள்ளக்கூடாது.

பி. எல். மூர்,
கவர்ன்மென்ட் ஆக்டிங் ஸெக்ரெடரி,
லா (லெஜிஸ்லெடிவ்) டிபார்ட்மென்ட்.

(A true translation)

N. DURAISWAMI RAO,
Acting Tamil Translator to Government.

MADRAS: PRINTED AND PUBLISHED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS.